1984 மார்ச் 20]

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, இதே பாலாற்றுப் படுகை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சரிடம் கேள்வி கேட்டபோது அதை ரத்து செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை அணுக வேண்டும் என்று சொன்னார்கள். வேலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு, அதற்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை என்று சொல்லப் படுகிறதே, இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் ஏதாவது அறிவிப்பை இப்போது செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நீர்ப்பாசனத் துறை சம்பந்தப்பட்டது.

தொழில் அதிபர்கள் தாங்களே மின் உற்பத்தி நிலையம் அமைத்துக் கொள்ள அனுமதி அளிக்கும் திட்டம்

350—(*வினா எண். 19651)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தொழிற்சாலை அதிபர்கள் தாங்களே மின் உற்பத்தி நிலையம் அமைத்துக்கொள்ள உரிமை கோரி விண்ணப்பித் துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 169.05 கோடி செலவில் 110 மெ. வாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றை சென்னை அருகே கூட்டுமுறையில் நிறுவ உத்தேசித்துள்ளதாகவும் அதற்கு அனுமதி கோரியும் சென்னையில் உள்ள தொழில் அதிபர்கள் ஒரு திட்ட அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். இத்திட்ட அறிக்கை மீது மத்திய அரசின் அனுமதி கோரி பரிந்துரை செய்யப்பட் டுள்ளது. இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சென்னை மற்றும் இதர இடங்களிலே, வேறு தொழிலதிபர்கள் மின் உற்பத்தி நிலையம் வைத்துக் கொள்வதற்கு ஏதேனும் அனுமதியை அரசிடம் கோரியிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதுவரையில் வந் துள்ளது இது ஒன்றுதான்.

[1984 மார்ச் 20

திரு. இரா. தாமரைக்கனி : புதிய தொழிற்சாலை வைப்போர், புதியதாக மின் உற்பத்தி நிலையத்தை நாங்களே வைத்துக் கொள்கிறோம் என்று அரசிடம் வேண்டுகோள் வைக்கிறபோது, அவர்களுக்குத் தனி விதிவிலக்கு அளித்து, சலுகைகளைக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, புதிய தொழிற்சாலை ஆரம்பிக்கபடுகிறபோது, அவர்களாகவே மின் உற்பத்தி செய்வது என்பது கூடுதலான விலையிலே மின்சாரத்தைப் பெற வேண்டிய நிலையை உருவாக்கும். ஆகையினாலே பெரும்பாலும் புதிய தொழிற்சாலைகள் மின்சார வாரியத்திடமிருந்து மின்சாரம் பெறத்தான் முயற்சி செய்யும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தின் தேவை அதிகரித்து வருகிற இந்த வேளையிலே, அதிலும் மின்சாரப் பற்றாக்குறை எப்போதும் இருந்து கொண்டிருக்கிற இந்த வேளையில், தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தை தனியார்கள் உற்பத்தி செய்வது என்பது நல்ல முயற்சி. இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலாவது இது மாதிரி நடைபெறுகிறதா ? தமிழக அரசாங்கம் இதற்கு ஏதாவது உதவி செய்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வேறு எந்த மாநிலங்களில் இந்த மாதிரி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற விவரம் என்னிடம் இல்லை. இருந்தாலும், மராட்டிய மாநிலத்தில் டாட்டா நிறுவனம் ஏற்கனவே இதைப் போன்று உற்பத்தி செய்து விநியோகம் செய்து வருகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் சென்னையின் வடபகுதியில் மிகப் பெரும் தொழில்கள் இருக்கின்ற காரணத்தாலே அங்கே இருந்த தொழில் அதிபர்கள் ஒன்றாகச் சேர்ந்து தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய அனல் மின் நிலையம் ஒன்றை உருவாக்கும் முயற்சி செய்து அதை இந்த அரசு பரிந்துரை செய்து இந்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கின்ற தொழில் அதிபர்கள் கூட்டுறவு முறையிலே மின் உற்பத்தி செய்கின்ற திட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அனுப்பியுள்ள திட்டத்திற்கு எவ்வளவு முதலீடு தேவைப்படுகின்றது ? எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய திறன் கொண்டவையாக அது இருக்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 9 கோடி முதலீடு. 110 மெகாவாட் மின் திறன்.